**ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் - 2022**

---

ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது.

இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை கட்டமைப்பின் ஒரு பகுதியாக உண்டாக்குவதும், மேல், வடமேல், மத்திய, தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 202 கிலோமீற்றர் தேசிய வீதிகளை மேம்படுத்துதல் மற்றும் பாலங்களை புனரமைத்தல் மற்றும் விரிவுபடுத்துதல் மூலம் போக்குவரத்துத் துறையின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வீதி வலையமைப்பு இணைப்பை மேம்படுத்துவதும் இச் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,121.32 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.46 மில்லியனானதுடன் அதில் ரூபா 4,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 2,561.32 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 22.46 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 சனவரி 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 5 இன் 36 ஆம் பிரிவின் பிரகாரம் தேறிய சொத்துக்கள்/ மூலதனத்தின் கீழ் அந்நிய செலாவணி ஆதாயம் அல்லது நட்டம் இனங்காணப்பட வேண்டும், ஆனால் நியம வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்திட்டமானது செலாவணி ஆதாயம் அல்லது நட்டத்தை இனங்கண்டிருக்கவில்லை. | - | 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பொதி 07 இற்கு வெளிநாட்டு நாணயம் மற்றும் உள்ளூர் நாணயத்தில் விகிதாசார முறையில் பணவளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்நியச் செலாவணி ஆதாயம்/ நட்டம் நாட்குறிப்பு உறுதிச்சீட்டில் பதிவு செய்யப்பட்டு, அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 08 இற்கு முரணாக 1,897 காணித்துண்டுகளுக்கான நட்டஈட்டு கொடுப்பனவுகள் மற்றும் காணி சுவீகரிப்பு தொடர்பில் 2,585 காணித்துண்டுகளுக்கான தாமத வட்டி என்பவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - | குறித்துக்கொள்ளப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டில் பிரதேச செயலகத்திலிருந்து உரிய விபரங்களைச் சேகரித்து இழப்பீடு மற்றும் வட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல். |

**2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா. மில்லியன் | தொடர்புடைய ஏடுகளின் பிரகாரம் பெறுமதி ரூபா. மில்லியன் | தொடர்புடைய ஏட்டின் விபரம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 4,754.48 | 4748.59 | இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் (IPC) பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள 06 பொதிகளின் நிர்மாணக் கிரயம். | 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பொதி 07 இற்கு வெளிநாட்டு நாணயம் மற்றும் உள்ளூர் நாணயத்தில் விகிதாசார முறையில் பணவளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பணவளிப்புக்கள் தொடர்பாக ஏற்படுகின்ற அந்நியச் செலாவணி ஆதாயம்/ நட்டம் நாட்குறிப்பு உறுதிச்சீட்டில் பதிவு செய்யப்பட்டதுடன் அந்த சீராக்கங்கள் ஒப்பந்த பதிவேட்டில் பதிவுசெய்யப்படவில்லை. | ஒப்பந்தப் பதிவேடு நாளதுவரை பேணப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| | | | | |
| (அ) | நிதிப்பிரமாணம் 753(3) | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் பொருளிருப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே மீளாய்வாண்டின் இறுதியில் பொருளிருப்பு புத்தகங்கள் சமப்படுத்தப்பட முடியாதிருந்தன. | உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பொருளிருப்பு பொருட்கள் பொருளிருப்பு பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஆனால் பொருளிருப்பு பதிவேட்டில் முன்கொண்டுவரப்பட்டவாறு ஆரம்ப மீதி காட்டப்படவில்லை. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு முதல் பொருட்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களை கடைப்பிடித்தல். |
| | | | | |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை<br><br>9.3 ஆம் பிரிவு | குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை செயற்திட்டத்தின் வழிநடாத்தல் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். ஆனால் மீளாய்வாண்டில் ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | நிதி நெருக்கடி மற்றும் நாட்டில் நிலவும் போக்குவரத்து பிரச்சனை காரணமாக வழிநடாத்தல் குழு கூட்டங்கள் பட்டியலிடப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்றுதல். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

**(i) காணி சுவீகரிப்பு**

| **கூறு** | **செயற்பாடு** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் காணித்துண்டுகள்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் காணித்துண்டுகள்** | **தாமதம்/ கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| காணி சுவீகரிப்பு | RDA இற்கு உரித்துறுதி மாற்றம் | 2772 | 146 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 730 காணித்துண்டுகளுக்காக ரூபா 245.13 மில்லியன் நட்டஈடு மற்றும் 155 காணித்துண்டுகளுக்காக ரூபா 22.86 மில்லியன் தொகை தாமத வட்டி என்பன செலுத்தப்பட்டிருந்தன. மேலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் உப உட்பிரிவின் பிரகாரம் 146 காணித்துண்டுகள் மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டுள்ளன. | மோசமான மேற்பார்வை காரணமாக காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளில் தாமதம். |

**முகாமைத்துவத்தின் பதில்** காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் பதிவு சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களால் மேற்கொள்ளப்படுகிறது. பிரதேச செயலகத்தில் பதிவு செய்வதில் தாமதம் உள்ளது, அதை பூர்த்திசெய்வதற்கு பல நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்கு காணி சுவீகரிப்பை பூர்த்தி செய்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

**(ii) சிவில் வேலைகள்**

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | |
| | | 14 | 2 | | |
| சிவில் வேலைகள் | பாலங்களை அகலப்படுத்துதல் | | | திட்டமிட்டவாறு ஒப்பந்தத்தை வழங்குவதில் தாமதம், பால இல. 4/2 அகலப்படுத்துதலில் மோசமான முன்னேற்றம் காரணமாக முக்கியமாகப் பாதிக்கப்பட்டது. | ஒப்பந்தத்தை வழங்குவதில் தாமதம் மற்றும் மோசமான மேற்பார்வை. |

**முகாமைத்துவத்தின் பதில்** இது 2021.10.23 இல் ஒப்புதலுக்காக நன்கொடையாளருக்கு பெறுகை முடிவு அனுப்பப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நன்கொடையாளரிடமிருந்து 2022.03.14 இல் பதில் கிடைந்தது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** மேலதிக கிரயம் இல்லாமல் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்ததாரரின் மோசமான முன்னேற்றம் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மூலம் ரூபா 19.51 மில்லியன் தொகை விலை நிகழத்தக்கவைகளாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. செயற்திட்டக் கிரயம் மேலதிகமாக ஏற்படுதவதற்கு இது நேரடியாகப் பாதிக்கலாம். | செயற்திட்டத்தின் முன்னேற்றத்துடன் தொடர்புபடுத்த முடியாத ஒப்பந்த நிபந்தனையின் 13.8 ஆம் உட்பிரிவின் பிரகாரம் நிர்மாணப் பொருட்களின் விலைத் தளம்பலை ஈடுசெய்வதற்கு விலை நிகழத்தக்கவைகள் செலுத்தப்பட்டுள்ளன. | மேலதிக கிரயம் இல்லாமல் செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | (A005) பேராதனை – பதுளை – செங்கலடி வீதிப் பிரிவின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்படி பணிகளின் திருத்தம் மற்றும் பராமரிப்புக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை ரூபா 7.71 மில்லியன் தொகையை | ஒப்பந்ததாரர் குறித்த தொகை மற்றும் அதற்கான வலிதான செயலாற்றல் பிணைமுறி என்பவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்தார்.<br><br>மிகுதிப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரரிற்கு ஏற்கனவே | மேலதிக கிரயம் இல்லாமல் செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவிட்டிருந்தது. ஆனால் 2023 ஏப்ரல் 18 வரை அந்தத் தொகையை ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிட்டு RDA இற்கு செலுத்த முடியாதிருந்தது. மேலும், ஒப்பந்ததாரர் 2022 ஏப்ரல் 18 வரையிலும் மீதமுள்ள பணிகளை பூர்த்திசெய்யத் தவறியிருந்தார். எனினும், மிகுதிப் பணிகளை பூர்த்திசெய்வதற்கு முன்னர் கையேற்றல் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக ஒப்பந்ததாரரால் செல்லுபடியாகும் நிறுத்திவைத்தல் பண பிணைமுறி பேணப்பட்டது. | |

## 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திற்கும் (OFID) இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் 2012 ஒக்தோபர் 08 ஆம் திகதிய கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 55 சதவீதம் 02 கூறுகளின் கீழ் OFID ஆல் நிதியளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் ஏனைய கூறுகள் உள்ளூர் நிதிகள் மூலம் நிதியளிக்கப்பட்டிருந்தன. ஆனால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு RDA ஆல் ரூபா 70.84 மில்லியன் தொகை நிதியளிக்கப்பட்டிருந்ததுடன் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக நிதிக்கூற்றுக்களில் இது மூலதனமாக சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நிதியளிப்பிற்கான அங்கீகாரம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அவசரமாக காணி சுவீகரிப்பு நோக்கங்களுக்காக நிதி வசதி பெறப்பட்டு, அந்தத் தொகை நிதிக்கூற்றுக்களில் மூலதனத்தில் காட்டப்பட்டுள்ளது. | ஏனைய நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சினால் ரூபா 16.11 மில்லியன் இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதனத்தின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. ஆனால், நிதிக்கான அங்கீகாரம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில், அத்தகைய செலவினங்களை சம்பந்தப்பட்ட செயற்திட்ட செலவின வாக்குப்பணத்திற்கு அறவிடுவதன் மூலம் பூர்வாங்க செலவினங்கள் அமைச்சால் மேற்கொள்ளப்பட்டன. | ஏனைய நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நானாவித வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3.13 மில்லியன் தொகையான பொதுச் செலவினங்களை (வாடகை, தண்ணீர், துப்பரவாக்கல்) பிரிப்பதற்கு சரியான மற்றும் நம்பகமான முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | நானாவித வெளிநாட்டு உதவி செயற்திட்டத்தின் கீழ் 07 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. எனவே, ஒவ்வொரு மாதமும் கட்டுநிதி மற்றும் ஒதுக்கீட்டின் கிடைக்கும் தன்மை மற்றும் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கான மொத்த செயற்திட்டக் கிரயத்தின் அடிப்படையில் தொகை அறவிடப்படுகிறது. | செலவினம் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். |